ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 25.09.2015 |

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 செத்தெம்பர்

2015 ஓகத்தில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் தொடர்ச்சியான இரண்டாவது மாதமாக மறைமுக எல்லையான -0.2 சதவீதத்தில் காணப்பட்டது. 2015 ஓகத்தில் ஆண்டுச் சராசரி அடிப்டையிலான முதன்மைப் பணவீக்கம் அதன் முன்னைய மாதத்தின் 1.3 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதத்திற்கு மேலும் மெதுவடைந்தது. அதேவேளை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான மையப் பணவீக்கம் 2015 ஓகத்தில் அதன் முன்னைய மாதத்தின் 3.5 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2015 யூனிலிருந்து மாற்றமடையாமல் காணப்பட்டு 2015 ஓகத்தில் 2.8 சதவீதத்தினைப் பதிவு செய்கிறது. முன்னோக்கிச் செல்கையில், முதன்மைப் பணவீக்கமானது மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் மற்றும் உலக பண்டங்களின் விலைகள் மெதுவடைந்தமை என்பவற்றினால் உதவப்பட்டு ஆண்டிறுதியில் 2.0 – 3.0 சதவீதத்தினுள் சாதகமாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாணயத் துறையில், உள்நாட்டு கொடுகடன் கூட்டுக்களின் விரிவாக்கத்தினால் முழுமையாக தூண்டப்பட்ட விரிந்த பணம் ($M_{2b}$) 2015 யூலையில் 16.2 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. உண்மை நியதிகளில் வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 21.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், 2015 யூலையில் தனியார் துறைக்கான கொடுகடன் 40.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் 2015இன் முதல் ஏழுமாத காலப்பகுதியின்போது மொத்தமாக 245.9 பில்லியனை அடைந்தது. தனியார் துறைக்கான அதிகரித்த கொடுகடன் உட்பாய்ச்சல்கள் நிலைத்திருந்தமைக்கு முக்கிய காரணம் குறைந்த பணவீக்க சூழலிற்கு மத்தியிலும் குறைந்த சந்தை வட்டி வீதங்கள் காணப்பட்டமையே ஆகும். அதேவேளை, குறிக்கப்பட்ட சில வகைக் கடன் வழங்கல்களிற்கு, குறிப்பாக உந்து ஊர்தி வாகனங்களின் கடன் வழங்கல் தொடர்பாக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் அதிகரித்த வளர்ச்சிப் போக்கினை மத்திய வங்கி அவதானித்துள்ளது. இதன்படி, நிதியியல் துறைக்கான முறைமை முழுவதிற்குமான இடர்நேர்வினை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய போக்கினை முற்கூட்டியே தடுக்கும் நோக்கில், ஒரு முன்மொழிசார்ந்த வழிமுறை ஒன்றாக மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் உந்து ஊர்திகளின் கொள்வனவு அல்லது பயன்படுத்துதல் நோக்கத்திற்காக

வழங்கப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் மத்திய வங்கி 70 சதவீத அதியுயர் பெறுமதிக்கான கடன் விகிதத்தினை நடைமுறைப்படுத்த தீர்மானித்தது. முன்னோக்கிச் செல்கையில், இலங்கை மத்திய வங்கி கொடுகடன் வளர்ச்சி அத்துடன் நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியின் ஒட்டுமொத்த போக்கின் மீது அவதானித்துக்கொண்டிருப்பதுடன் நிலைத்திருக்கக்கூடிய அடிப்படையில் விலை உறுதிப்பாட்டினை பேணுவதில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகளினை உடனடியாகத் தடுக்கும் வழிமுறைகளையும் மேற்கொள்கிறது.

வெளிநாட்டுத் துறையில், 2015 யூலையில் இறக்குமதிகள் மீதான செலவினங்களின் வீழ்ச்சியானது, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சியை விட உயர்வாகக் காணப்பட்டு இம்மாதத்தின் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையை சுருக்கமடையச் செய்தது. செலாவணி பரிமாற்று வீதங்களைத் தீர்மானிப்பதில் உயர்ந்தளவான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்த மத்திய வங்கியின் தீர்மானத்தின் மூலம், 2015இன் இதுவரையான காலப்பகுதியில், ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக ஏறத்தாழ 7 சதவீதத்தினால் தேய்வடைந்துள்ளது. ஏற்றுமதிகளை மேம்படுத்தக் கூடியதாகவுள்ள வேளையில், அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை குறைக்கும் பரிமாற்று வீதங்களின் அண்மைக்கால தேய்மானமானது, வர்த்தகச் சமநிலை மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் பணவனுப்புதல்களின் ஒழுங்கான உட்பாய்ச்சல்கள் மற்றும் பணிகள் கணக்கிற்கான ஏனைய உட்பாய்ச்சல்களுடன் சேர்ந்த சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் போன்றவற்றுடனான இத்தகைய முன்னேற்றங்கள், நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறையை சுருக்கமடைவதற்கும், வெளிநாட்டுத் துறையின் பின்னடைவை வலுப்படுத்தவும் உதவியது. அதேவேளை, 2015 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாக விளங்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2015 ஓகத்து இறுதியளவில் ஐ.அ.டொலர் 6.4 பில்லியனுக்குக் குறைவடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அரசாங்கத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட நீண்ட கால வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்கள் மூலம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி, இலங்கைப் பொருளாதாரமானது 2015இன் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் 6.7 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன், 2014இன் முதல் காலாண்டுப்பகுதியின் 1.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2015இன் முதல் காலாண்டுப் பகுதியில் 5.6 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவுசெய்தது. இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பொருளாதார வளர்ச்சியானது கைத்தொழில் மற்றும் வேளாண்மை துறைகளிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் சேர்ந்து பணிகள் துறையின் மேம்படுத்தப்பட்ட செயலாற்றத்தால் பெரிதும் ஆதரவளிக்கப்பட்டது.

பொருளாதாரத்தின் மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளை கவனத்தில் கொண்ட நாணயச் சபை 2015 செத்தெம்பர் 25இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. இதன்படி, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் மாறாது பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |